# பகுதி 1:
# அழியும் மனிதன்

*நம்மில் பெரும்பான்மையானவர்கள், எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று அறிய விரும்புகின்றோம். எதிர்காலத்தைப் பற்றி முன்னுரைக்க முடியும் என்று உரிமைகோருகின்றவர்கள் சில வட்டாரங்களில் பிரபல மானவர்களாய் இருக்கின்றனர். மர்மம் நிறைந்த ஒரு புத்தகத்தை நாம் வாசிக்கையில், என்ன நடந்தது என்பதைக் கண்டறிவதற்கு நாம் பெரும் பாலும் அதன் கடைசிப் பகுதியைத் திருப்பிப் பார்க்கின்றோம். நம்மில் பலர், மரணத்திற்குப் பின்பு என்ன நடக்கும் என்று அறிய விரும்பு கின்றோம். நாம் இந்த வாழ்வை விட்டு வெளியேறும்போது என்ன நடக்கும் என்பதைப் பற்றி கடைசிப் பக்கங்களைத் திருப்பி வாசிக்கவும் முடியும் என்பதே நற்செய்தியாக உள்ளது. நாம் அறிய விரும்புகின்ற ஒவ்வொன் றையும் தேவன் வெளிப்படுத்தியிருக்கவில்லை, ஆனால் நாம் மரணத்தின் கதவினூடே அடியெடுத்து வைக்கும்போது நமது வாழ்வு என்ற மாபெரும் நாடகத்தில் என்ன நடைபெறும் என்பதைக் கூறுமளவுக்கு இந்த வாழ்வைத் தொடர்ந்து நடைபெறும் நிகழ்ச்சிகளில் போதுமானவற்றை அவர் வெளிப்படுத்தியிருக்கின்றார்.*

*''உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே'' என்றிருக்கையில் (பிர. 9:5), நாம் எவ்வளவு காலம் உயிரோடிருப்போம் என்பதை அறிவதில்லை. நாம் நமது பெரும்பான்மையான நேரத்தை, நிச்சயமற்றது என்று நாம் அறிந்துள்ள வாழ்வுக்குத் தயாரிப்பதில் செலவிடுகின்றோம், அதே வேளையில் மிகவும் குறைவான நேரத்தையே, நிச்சயமானது என்று நாம் அறிந்துள்ள மரணத்திற்குத் தயாரிப்பதில் செலவிடுகின்றோம்.*

*நாம் ஏன் மரணத்தின்மீது ஆர்வமாயிருக்க வேண்டும்? அல்லது நாம் மரிக்கும்போது என்ன நடக்கும் என்பதில் நாம் ஏன் அக்கறையாயிருக்க வேண்டும்? மரணமடைவதின் அனுபவம் எதைப் போன்றிருக்கும்? அது நம்மை எவ்வாறு பாதிக்கிறது? இந்தக் கேள்விகளுக்கான பதில்களைப் புரிந்துகொள்ளுதல் என்பது, மரணம் பற்றிய நமது கண்ணோட்டத்தின்மீது செல்வாக்குச் செலுத்தி, மரணத்தை நோக்கிய நமது எண்ணப்போக்குகளை (நமது சொந்த மற்றும் பிறரின் எண்ணப்போக்குகளை) வடிவமைத்து, நமக்கு நம்பிக்கையளித்து, நாம் வாழும் வாழ்வின்மீது செயல்தாக்கம் செய்து, மரணத்திற்குத் தயாராகும்படி நம்மை ஊக்குவிக்க முடியும்.*

*இந்தப் பிரிவில் நாம், அழிவின் தன்மை, நமது வடிவாக்கம், மரணத் தின்போது என்ன நடக்கும், மரணத்திற்குப் பிந்திய வாழ்வின் உறுதிப்பாடு, மற்றும் மரித்தவர்களின் இடைப்பட்ட நிலை, அதாவது மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்கு இடையில் மனிதனின் நிலை ஆகியவற்றை ஆழ்ந்து சிந்திப்போம்.*